

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (21.11.2024) ஈரோடு மாவட்டம், தாளவாடி, சேஷன் நகரில் நடைபெற்ற அரசு விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள். உடன் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ரெ.சதீஸ் கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 20.11.2024 அன்று ஈரோடு மாவட்ட பவானியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசினர் மாணவியர் விடுதியில் நேரில் சென்று ஆய்வு செய்து, மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் அடிப்படை வசதிகளை குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மாவட்ட உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. — அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை!**

# 'கலைஞர் 100 வினாடி - வினா' மாபெரும் இறுதிப் போட்டி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ. 22 -

திராவிட இயக்க வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக மகளிர் அணி சார்பில், கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் மாபெரும் அறிவுத் திருவிழாவாக 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டிகள் 12 மண்டலங்களாக நடைபெற்று வந்தது.

கலைஞர் வினாடி-வினா இன்று (நவம்பர்-22) காலை 9 மணியள வில் அரையிறுதிப் போட்டி அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

கலைஞர் 100 வினாடி-வினா மாபெரும் இறுதிப் போட்டி நாளை (23.11.2024 - சனிக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் தொகுத்து வழங்குகிறார். கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், காரல் மார்க்ஸ், சித்திரமுகி சத்யவாணி முத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பவானி ராஜேந்திரன், மலர் மரகதம், அங்கையற்கண்ணி, சத்யா பழனிகுமார், சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், ராணி ரவிச்சந்திரன், அமலு விஜயன் எம்.எல்.ஏ., மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, உமா மகேஸ்வரி, ஜெசி பொன்ராணி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., அ.ரியா, யாழினி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

---

**'கலைஞர் 100 வினாடி வினா' இறுதிப்போட்டி: முதல்வர் பரிசு வழங்குகிறார்!**

# கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் — நாமக்கல் பா.இராணி வேண்டுகோள்!

சென்னை, நவ. 22 -

கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் முன்னெடுப்பில் திமுக மகளிர் அணி சார்பில் திராவிட இயக்க வரலாறு, திமுகவின் வரலாறு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் மாபெரும் அறிவுத் திருவிழா 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டி 12 மண்டலங்களாக நடைபெற்றது.

இன்று ( நவம்பர் 22ஆம் தேதி) அரையிறுதி போட்டியும். நாளை (23 ஆம் தேதி) மாபெரும் இறுதிப் போட்டியும் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வினாடி - வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

தொடக்க உரையை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பனும் வரவேற்புரையை கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சனும், நன்றியுரையை கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணியும் ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை கோவி லெனின் தொகுத்து வழங்குகிறார்.

இதில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். அனைவரும் வருகை தர அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**தாம்பரம் மாநகர தி.மு.க - தாம்பரம் சட்டமன்றத் தொகுதி -**

# வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

**டி.ஆர்.பாலு – தா.மோ.அன்பரசன் – கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!**
**மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அறிவிப்பு!**



தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில், மாநகரத்திற்குட்பட்ட, தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (23.11.2024 - சனிக்கிழமை) மாலை 04.00 மணிக்கு, கிழக்கு தாம்பரம், வேளச்சேரி பிரதான சாலை, கேம்ப் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீவாசுதேவா திருமண மண்டபத்தில் எனது (எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,) தலைமையில் நடைபெற உள்ளது. இந்தகூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்ட கழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள், மண்டலக்குழுத் தலைவர்கள், இருபால் மாமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,**
தாம்பரம் மாநகர கழகச் செயலாளர்

---



**தி.மு.க. இளைஞர் அணி**

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 22/11/2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாலக்கோடு | பி.எம்.குப்புசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், பெரியாம்பட்டி, தருமபுரி. |
| | மதியம் 2.30 மணி | | அரூர் | கொங்கு வேளாளர் திருமண மண்டபம், அரூர், தருமபுரி. |
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

**தா.இளைய அருணா தலைமை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலை**

# இராயபுரத்தில் துணை முதல்வர் பிறந்தநாள்: 500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நல உதவிகள்!

## ஆர்.எஸ். பாரதி வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி எம்.பி. – ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, நவ.22-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இராயபுரத்தில் 500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நிதி உதவி வழங்கும் விழா இன்று (22.11.2024- வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு, இராயபுரம் அறிவகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் தா.இளைய அருணா தலைமை வகிக்கிறார். மு. கோபி, இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், நா. சண்முகம், வே.சிவகுமார், சி.ராஜேந்திரன், த.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், பி.ஜெயலட்சுமி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நிதி உதவியை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் இதில் டாக்டர் அ.சுபேர்கான், இரா.மதிவாணன், பி.டி. பாண்டிச்செல்வம், ந.மனோகரன், இரா. கருணாநிதி, க.நாகம்மை, கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், இ.மதன், வி. மலையம்மாள், கா.கோவிந்தசாமி, லியோ டி.சுரேஷ், ஜே.கே.நாதன், கார்த்திக், செங்குட்டுவன், லட்சுமி வேலு, லயன் எம். தீனதயாளன், ப.சோமசுந்தர மூர்த்தி, லயோலா கே.மதன், க. கலைச்செல்வன், ஜி.சதீஷ்குமார், என்.கிருஷ்ணன், கோ.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ. கௌரிஸ்வரன், பா.வேளாங்கண்ணி, விஜயலட்சுமி விஜயகுமார், விஜயகுமார், கீதா சுரேஷ், ஐ. சி.எப். பழனி, என்.பாரி, எம்.என்.வெங்கட், க.லட்சுமணன், வி.குமார், அத்தோ ஆர்.முனுசாமி, எம். பாலாஜி, ந.குமார், பிரியாணி எம்.பாலா, ஆர்.டி. ஜெய்சங்கர், இரா.பொன்முடி, ஏ.அன்வர், எஸ்.யுவராஜ், எஸ். முகமது மொய்தீன், கே.என்.பார்த்திபன், வி.வி.தங்கராஜ், எஸ்.குமரன், ஏ.இம்ரான், கோ.ஹரிஷ்குமார், பி.டி.பி. கதிரவன், டி.மதன்ராஜ், க.சசிதரன், எம்.எம்.பி. சலாவுதீன், செந்தில் குமார், சதீஷ்குமார், சுவீஷ் ஆர். இளையராஜா, கே.முனுசாமி, எம்.எம். சந்துரு, த.இரவி, சி.சிவா, ஜி.எஸ். முருகன், ஜெ.தரணிதரன், இரா.சரவணன், ஆர். ராஜன், எம்.டில்லிபாபு, கே.சங்கர், டி.கருணாகரன், ஆ.ஆனந்தன், வி.கே.ராஜ், இரா.குருவம்மாள், தி.சரவணகுமார், எம்.லோகநாதன், மு.ராஜன், எஸ். ரமேஷ், கோ.அண்ணாதுரை, க.சேகரன், வண்ணை இ.மூர்த்தி, எம்.இ.சாகுல் அமீது மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

50வது வட்டச் செயலாளர் ஆர்.வி.கணேஷ் நன்றி கூறுகிறார்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172–வது வார்டில் உள்ள வாக்கு சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்களில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்படி ஆய்வு செய்து இறந்த வாக்காளர், இடம் மாறிய வாக்காளர், இரட்டை பதிவு ஆகியவற்றை கண்டறிந்து அவர்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்ய அறிவுருத்தி அதற்கான படிவங்களை சைதாப்பேட்டை தொகுதி பார்வையாளரும் கழக அயலக அணி மாநில துணைச் செயலாளருமான பரிதி இளம் சுருதி எம்.சி. , சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் முருகேசன், வட்டச் செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா, வே.முருகன், கழகப் பேச்சாளர் க.ஒப்பிலாமணி, க.உமாபதி உள்ளிட்ட வட்ட நிர்வாகிகள், முன்னணியினர் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–148, நெற்குன்றம், கோதண்டபாணி நகர், வாஞ்சிநாதன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2022–2023) கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சியில் நேற்று 21.11.2024 மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., கலந்து கொண்டு பல்நோக்கு கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன், எம்.சி.., வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.